REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 5உ செவ்வாய் (18—1—55) ★ ★ வெளியூர்: தை 6உ புதன் (19—1—55) [இதழ் 185

'உற்சவமூர்த்தி'யாக - - தேபர் விருப்பம்

சென்னை, ஜன. 17—

நாட்டில் உள்ள நிலைகளை அறிந்துகொள்ளவும், பல்வேறு பிரச்சினைகளில் மக்கள் கொள்ளும் கருத்துக்களை அறிந்துகொள்ளவும், அப்படி அறிந்துகொண்ட கருத்துக்களை மாநில, மத்திய அரசாங்கங்களுக்கு எடுத்துக் கூறவும், உதவிகரமாயிருக்கும் வகையில் தான் ஒரு 'ஊர் சுற்றும் காங்கிரஸ் தலைவராக' இருக்கப் பிரியப்படுவதாக காங்கிரசின் 60-வது மாநாட்டுத் தலைவர் யூ என். தேபர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

'இம்முதலமைச்சர் வேண்டாமே!'

'இவர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை'

'நாங்களல்லவா முதல் மந்திரியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?'

பெப்சு முதல் மந்திரிக்கு எதிராகக் காங்கிரசில் குழப்பம்

நிலைமையை விளக்க ஒரு அமைச்சரின் ஆவடிக் காவடி

பெப்சு மந்திரி சபையில் ஒரு புதிய நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. அங்கு ஏற்கனவே காங்கிரஸ் முதல் மந்திரியாக இருந்துவந்த முற்கால ஐ. சி. எஸ். அதிகாரியான கர்னல் இரகுவிர சிங் முடிவெய்திவிட்டார். அவருக்குப் பதிலாக, பிரிஷ்பகான் என்பவரை முதல் மந்திரியாக காங்கிரஸ் மேலிடம் நியமித்தது; அவரும், ஏழு நபர்களை உடன்சேர்த்துக்கொண்டு ஒரு அமைச்சர் குழுவை உருவாக்கினர்.

பிரிஷ்பகானை முதல் மந்திரியாக நியமிப்பதில், பெப்சு சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இருக்கும் உரிமையைப் புறக்கணித்துவிட்டு, எதேச்சாதிகாரமாகக் காங்கிரஸ் மேலிடம் நடந்துகொண்டிருக்கிறது. இப்போக்கு, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கு அதிருப்தியைக் கொடுத்திருக்கிறது. அதன் விளைவாக, 16 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஒன்றுகூடி, புதிய முதல் மந்திரி மீது 'நம்பிக்கை இல்லை' எனத் தீர்மானித்து ஒரு குறிப்பறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள். அதில், அவர்கள் அனைவரும் கையொப்பமும் இட்டிருக்கிறார்கள். அப்பதினறு உறுப்பினர்களே பெரும்பான்மையினராகவும் உள்ளனர்.

முதல் மந்திரி மீது 'நம்பிக்கை இல்லை' என்ற குறிப்பறிக்கையில் அமைச்சராக உள்ள எவரும் கையொப்பமிடவில்லை என்றும், இருந்தாலும் சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது, அமைச்சர்களில் ஐவர், முதல் மந்திரிக்கு எதிராக குறிப்பறிக்கையை ஆதரிக்கக் கூடும் என்றும் உறுதியாக நம்பப்படுகிறது.

முதல் மந்திரி பிரிஷ்பகான் ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களுக்கு எதிராக, ஆதரவு திரட்டி வருகிறார்கள். இருந்தாலும் இதுவரை அம்முயற்சியில் சாதாரண பயனும் ஏற்படவில்லை என்றும் அறியக்கிடக்கிறது.

இத்தகு குழப்பமான நெருக்கடி நிலையை, காங்கிரஸ் மேலிடத்திற்கு விளக்கிக் கூறும் நோக்கத்துடன் ஆவடிக்குக் காவடி எடுத்துக்கொண்டு வரப்படுகிறது, பெப்சு அமைச்சர் குழுவைச் சேர்ந்த ஒருவரால். பெப்சு காங்கிரஸ் ஆட்சியில் நிலவரி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் அரிசரன் சிங், ஆவடிக்கு விரைகிறார், பெப்சு காங்கிரசில் ஏற்பட்டுள்ள அமளியை நேரில் அறிவிப்பதற்கு!

எதற்கோ?

இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை பர்மா சென்று 10 தினங்களுக்கு புத்த பிட்சுவாக மாறி தியானத்தில் மூழ்கியிருக்கப் போகிறாராம்! அதுசம்மந்தமாக பர்மா பிரதமரின் அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டுள்ளாராம்.

நல்ல தீர்ப்பு!

இந்தியத் தொழிலாளர் அப்பீல் தார் டிரிபியூனல் அளித்த தீர்ப்பு ஒன்றின்படி, பம்பாயில், ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 2 இலட்சம் பேர் 'கிராக்கிப்படி' உயர்வு பெறுவர். இந்த உயர்வு, அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதமாக இருக்கிறது.

1952-ம் ஆண்டிற்கு உபரி போனஸ் தொகையாக சுமார் ½ கோடி ரூபாய் வழங்கப்படவேண்டுமென்றும் அனுமதிக்கப் பட்டுவிட்டிருக்கிறது.

இந்தத் தீர்ப்பினால் அவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் கிராக்கிப்படி உயர்வு, 1953-ம் ஆண்டு மே மாதம்தொட்டே பெறுவார்களாம். 'கிராக்கிப்படி' உயர்விற்காக மொத்தமாக ரூ. 2 கோடி வழங்கப்படும்.

அது, அகில - இந்திய வானொலி அல்ல!

மாஸ்கோ வானொலி நிலையத்தில் மது அருந்துவதினால் ஏற்படும் தீமைகள் குறித்து இதுகாறும் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது. இப்போது புகை பிடிப்பதினால் வரும் கேடுகளையும், கெடு நோய்களையும் எடுத்துக் கூறுகிற பிரச்சார வேலையில் அந்த வானொலி நிலையம் ஈடுபட்டுள்ளது.

புகை பிடிப்பதினால், இருதயம் பாதிக்கப்படுவதுடன் நரம்புகளையும், ஜீரணக் கருவிகளையும் சீர்குலைக்கிறது. கவனக் குறைவையும் உண்டுபண்ணுகிறது என்று அவ்வானொலி நிலையம் மக்களை எச்சரிக்கிறது.

மணமாகாத அகதிப் பெண்களுக்கு யோகம்!

மணக்க விரும்பும் வாலிபர்களுக்கு அரசாங்கப் பரிசு!

மேற்குப் பகுதி அகதிகளுக்கு மட்டும்தான் இச்சலுகையாம்

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி, மணப்பருவம் அடைந்தும் மணமாகாது இருக்கும் அகதிப் பெண்களின் மணத்தைத் துரிதப்படுத்த டில்லி அரசாங்கம் முனைந்திருக்கிறது.

அப்பெண்களை மணந்துகொள்ள 'வேண்டுமென்ற ஆசையை வாலிபர்களிடைத் தூண்டுவதற்காக, அரசாங்கச் செலவில் உயர்ந்தபட்சமாக ரூ. 200 வரை, மணம் முடித்துக்கொள்ளும் ஒவ்வொரு அகதிப் பெண்களுக்கும் பரிசு வழங்கப்போவதாக அரசாங்க சார்பில் அமைச்சர் மேகர்சந்த் கன்னு அறிவித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்தில் குடிபுகுந்துள்ள அகதிப் பெண்களுக்கு மட்டுந்தான் இம்மணச் சலுகை தரப்படும் எனவும் அந்த அமைச்சர் அறிவித்துள்ளார். இவ்வறிவிப்பை கல்கத்தாவில் உள்ள அகதிகள் சமூக ஊழியர்களிடம் தாம் பேசிக்கொண்டு இருந்தபொழுது மேற்படி அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னை பத்திரிகைகளின் புளுகு

பெரியார் அம்பலப்படுத்துகிறார்

மலேயாவில் தடை ஏதும் விதிக்கப்படவில்லை

சென்னை. ஜன. 17—

கடந்த இரு மாத காலமாக, மலேயா, பர்மா ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, இன்று காலை 8 மணியளவில் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னை திரும்பினார்கள். அவருக்கு சிறப்பான முறையில் சென்னை துறைமுகத்தில் வரவேற்பு தரப்பட்டது; மாலையில், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. பெரியார் அவர்கள் தனது சுற்றுப் பயணம் பற்றியும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் பேசினார்.

"மலேயாவில் எனது பேச்சுக்கு சிலர் எதிர்ப்புக் கிளப்பினார்கள். எனது கூட்டங்களுக்குத் தடை விதிக்க வேண்டுமென மலேயா அதிகாரிகளைக் கேட்டனர்; ஆனால், மலேயா அதிகாரிகள் தடை எதும் விதிக்கவில்லை; எப்போதும், அங்கு, என் பின்னால் போலீஸ் லாரி வந்துகொண்டே இருந்தது; ஆனால், ஒருபோதும் நான் பேசுவதை அந்த மலேயா அதிகாரியும் குறுக்கிட்டுத் தடுக்கவில்லை; எனக்கு மலேயாவில் 23 நாட்கள் மட்டுமே தங்க அனுமதி இருந்தது; ஆனால், நான் விரும்பினால் மூன்று மாதங்கள் தங்கக்கூட அனுமதிக்க மலேயா அதிகாரிகள் தயாராயிருந்தனர்," என்று பெரியார் அவர்கள் நிருபர்களிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தீர்ப்பு ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜன. 17—

திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின் விளைவாகக் கைது செய்யப்பட்டு, நாகர்கோவிலை அடுத்த தக்கலை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ள திரு—கொச்சி மாநில சட்டசபை உறுப்பினர்களான குஞ்சன் (நாடார்), நல்லதம்பி, எஸ். டி. மோசஸ் ஆகியோர் தங்கள்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வேறு மாநிலத்துக்கு மாற்றிவிட வேண்டுமென்று கோரி தலைமை உயர்நீதி மன்றத்திற்கு (சுப்ரீம் கோர்ட்) செய்துள்ள மனு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

அம்மனுவில் அவர்கள், தாங்கள் கடந்த 5½ மாதங்களாகவே சிறையில் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், பின்னர் தீர்ப்புக் கூறுவதை ஒத்திவைத்தனர்.

12 ஆண்டுகள் படியுங்கள்!

உயர் இடை நிலைப் பள்ளி (செகண்டரி)ப் படிப்பை மூன்றாண்டுகளிலிருந்து நான்காண்டுகளாக உயர்த்த வேண்டும் என்று, தென் இந்திய ஆசிரியர்கள் யூனியனின் மாநாடு ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது.

இத்திட்டப்படி, இனிமேல், எஸ். எஸ். எல் சி. பள்ளிப் படிப்பிற்கான அத்தாட்சிப் பத்திரம் (சர்டிபிக்கேட்) வாங்க 12 ஆண்டுகள் தொடர்ந்து படிக்க வேண்டும்

'சுதந்திர" இந்தியாவில் ரிக்ஷா இழுப்போர் தொகை உயர்ந்துள்ளது

டாக்டர் லோகியா குற்றச்சாட்டு

"கடந்த ஏழாண்டு காலத்தில் காசி நகரில் மட்டும் ரிக்ஷா இழுப்பவர் தொகை 500 முதல் 10,000-மாக உயர்ந்துள்ளது; இந்த நிலையில், காங்கிரஸ், குருட்டுத் தனமாக நாட்டை இயந்திர மயமாக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது;" குடிசைத் தொழில், சிறு இயந்திரத் தொழில் இவற்றின் வளர்ச்சி பற்றி வாயளவில் பேசுகிறது."

—என்று காங்கிரஸ் மீது குற்றஞ் சுமத்தி ம சோ. கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா, இந்தூரில் பேசியிருக்கிறார்.

'இன்று நாட்டில் அதிகரித்துள்ளவை இரண்டு தொழில்களே; ஒன்று, ரிக்ஷா இழுத்தல்; மற்றொன்று, பிச்சை எடுத்தல்; வேலையில்லாத் திண்டாட்டம் வேறு, வெகுவாக அதிகரித்துள்ளது."

'நாடு வளம் பெற்று வருகிறது,' என்ற காங்கிரசாரின் பிரச்சாரத்தைக் குறிப்பிட்டு "சித்தரஞ்சன் போன்ற பெரும் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதினாலேயே நாடு நலமும் வளமும் பெற்றுவிட்டதாகக் கொள்ள முடியாது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

குடிமகன் குடிமகனே!

காட்மண்டு, ஜன. 18—

இங்கு அமுலிலிருந்துவரும் தடையுத்தரவை மீறி கூட்டமொன்றில் கலந்துகொண்டதற்காக நேப்பாளப் பிரதமர் கொய்ராலாவின் மகனான கமல், நேப்பாள வெளிநாட்டமைச்சர் மகன் மதன் ஆகிய இருவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—1—1955 செவ்வாய்

ஆவடி மாநாடு—மகத்தான வாய்ப்பு

இந்தியக் காங்கிரசின் 60-வது ஆண்டு மாநாடு சென்னையை அடுத்துள்ள ஆவடியில் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மாநாட்டுப் பெயரில் 60-வது ஆண்டு எனக் காங்கிரசின் பிறப்பைப்பற்றிக் குறிப்பிடப்பட்டபோதிலும், காங்கிரஸ் தோன்றி எழுபது ஆண்டுகள் ஆகின்றன எனக் காங்கிரசின் வயதைக் கணித்துக் கூறியிருக்கிறார், காங்கிரசே நேரு—நேரு பண்டிதரே காங்கிரஸ்— என்ற உச்ச நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிற பண்டித நேரு.

விடுதலை இயக்கம் என்ற கோணத்திலிருந்து, எழுபது ஆண்டு நிரம்பப்பெற்ற காங்கிரசின் நடைமுறை வரலாற்றை மதிப்பிட்டுக் கூறுவதாக இருந்தால், அது வெறும் துன்பியல் முடிவுடைய சோக வரலாறு என்றுதான் திட்டவட்டமாகக் கூற வேண்டியிருக்கிறது. வெண்ணிலவை விளையாட்டுக் கருவி என நினைத்து, முழு நிலவைப் பெற்று அகமகிழ நினைத்த ஒரு சிறுவன், நீரில் தோன்றிய நிலவின் உருவெளித் தோற்றத்தைப் பெற்று மகிழ்ந்த கதையாக முடிந்தது, எழுபது ஆண்டு காங்கிரசின் மூலக் கோட்பாடு.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து 'ஏக இந்தியா'—'ஒரே இந்தியா'வைப் பெற்றாக வேண்டுமென்பது காங்கிரசின் மூலக் கோட்பாடு. ஆனால், அம்மூலக் கோட்பாட்டில் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்குப் பதிலாக, முழுத் தோல்வியே அடைந்திருக்கிறது. அதன் மூலக் கோரிக்கையான 'முழு இந்தியா' கிடைக்கவில்லை. அது, 'விடோம்—கொடோம்—இணங்கோம்' எனக் கூறி வந்ததற்கு மாறாக, 'வெட்டப்பட்ட இந்தியா'வையே இறுதியில் பெற்றிருக்கிறது.

1947-ம் ஆண்டுக்கு முன்பு வரையில், இந்தியத் துணைக் கண்டம் முழுதிலும், ஒரே ஒரு பிரிட்டிஷ் ஆட்சிதான் நடைபெற்று வந்தது. ஆனால் அதன் பிறகோ, அதற்குமுன் ஒரே பிரிட்டிஷ் பிடியின்கீழ் இருந்துவந்த இந்தியத் துணைக் கண்டம், இரு கூறுகளாக்கப்பட்டு, இரு பெரும் சுதந்திரத் தனி அரசுகள் தோன்றுவதற்கான வாய்ப்பும் வசதியும் பெற்றுவிட்டது. இந்தியத் துணைக் கண்டத்தில் இரு சுதந்திர அரசுகள் அமைவதற்கு, தான் ஒப்பினால் அல்லாது, தனது குறிக்கோள் சிதைந்த அளவிலாவது வெற்றி பெறுவதற்கு வாய்ப்பிருக்காது என்ற ஒரு நெருக்கடி காங்கிரசிற்கு ஏற்பட்டது. அந்நெருக்கடியை அலட்சியப்படுத்திவிட்டு, தனது மூல நோக்கத்தை வெற்றியுறச் செய்யக் கூடிய பேராற்றல், வயதில் முதிர்ந்த காங்கிரசிற்கு இல்லாமற் போய்விட்டது. காங்கிரசிற்கு இருந்த பலத்தைக் காட்டிலும் காங்கிரசின் மூல நோக்கத்தை முறியடிக்கவும், அந்நோக்கத்தை உதறித் தள்ளிவிட்டு, காங்கிரசைக் கீழிறங்கி வரச் செய்யவுமான பலம், தொடர்புடைய மற்ற சக்திகளுக்கு இருந்தது. காங்கிரஸ் வரலாற்றின் உள்ளடக்கமாக இருக்கும் இந்த உண்மையை, பெயருக்குப் பொருத்தமாக உள்ள எந்த வரலாற்று ஆசிரியரும் மறந்துவிட முடியாது; மறுத்துவிடவும் முடியாது.

முதற் கோணல் முற்றும் கோணல். தவறான துவக்கம் தவறுடைய முடிவில் தான் முடிவுறும். இந்தியாவை—ஒரு நாடு—என அதன் சென்ற கால வரலாறு ஒப்புக் கொள்ளவில்லை. இந்தியா—ஒரு துணைக் கண்டமாகத்தான் அன்று இருந்திருக்கிறது. வெள்ளை ஏகாதிபத்தியம் அளவுக்கு மீறி, அச்சுறுத்தி உருவாக்கியதுதான் 'இந்தியா!' இந்த அடிப்படை வரலாற்று உண்மையை, அன்று காங்கிரஸ் தலைவர்கள் மறந்து, தவறான கோரிக்கையைத் தங்கள் கட்சியின் மூலக் கோட்பாடாகக் கொண்டு செயல்பட்டு வந்ததின் சோக விளைவுதான், இறுதியும் துன்ப முடிவாக முடிந்ததற்குக் காரணம்.

இவ்வரலாறு கூறும் பாடம், கல்லில் செதுக்கிய எழுத்துப்போல் காட்சி தந்தவண்ணம் உள்ளது. வரலாறு போதிக்கும் இவ்வரிய படிப்பினையை, கிடைத்தற்கரிய தோர் வழிகாட்டியாகக் கொண்டு, தங்கள் சிந்தனையையும் செயலையும் காங்கிரஸ் தலைவர்கள் செப்பனிட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. என்றும்போல் மாறு மனத்தினராகவே அத்தலைவர்கள் இருந்து வருகின்றனர்.

வரலாறு என்பது, தன்னைத் தானே உலக மக்களுக்கு அறிவித்துக்கொள்ள, ஆண்டவன் எடுத்துக்கொள்ளும் சிறு சிறு முயற்சியின் தொகுப்பு அல்ல; சென்ற காலச் சம்பவங்களின் காரண காரியங்களை விளக்கி, எதிர்காலத்தில் மக்கள் மேற்கொண்டு செயல்பட வேண்டிய சீரிய முறைகளை மறைமுகமாகச் சுட்டிக்காட்டும் இயல்பு கொண்ட பேராசிரியனாகும். வரலாறு—ஒரு எச்சரிக்கை ஏடு. அதை மதியாது நடக்க முனைபவர், முடிவில் இடர்படுவதும், தோல்வியுறுவதும் முக்காலும் நிச்சயம் என்பதும் வரலாற்றின் அறிவுரையேயாகும். நிற்க,

இந்தியத் துணைக் கண்டத்தில் திராவிடர் என்ற ஒரு இன மக்கள் உள்ளனர்—அவர்களுக்கு எனத் தனி வரலாறும், வெள்ளையர் வருகைக்கு முன் டெல்லியில் கோலோச்சிய அசோகனோ, அக்பரோ அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தியதில்லை—என்ற உண்மைகளை இந்தியப் பேரரசின் மூல நடிகரான பண்டித நேரு, இந்திய வரலாற்றில் ஏற்கனவே படித்தே இருக்கிறார். இருந்தாலும், அவ்வரலாற்று உண்மைகள் அனைத்தும் செத்த சம்பவங்கள்—அவைகள் மீண்டும் பிறந்தெழ முடியாதவைகள்—என அவர் நினைத்துச் செயலாற்றி வருகிறார். அம்மங்காப் புகழ் மீண்டும் புதுமணம் பெற்று வீசத் தொடங்கியுள்ளது—அவ்வணையா விளக்கு மீண்டும் சுடர்விட்டு எரியத் தொடங்கி இருக்கிறது—என்ற பேருண்மையை, ஆவடியில், அகமகிழ்வோடு பண்டிதர் இருக்கும் நேரத்தில், அவரிடம் அறிவுறுத்தியாக வேண்டும். அதற்கான ஒரு அரிய மகத்தான வாய்ப்பு, இத்தரணியில் காங்கிரஸ் பெயரால் நடைபெற்று வரும் ஆட்சிக்கு நடுநாயகமாக விளங்கும் கனம் காமராஜர் அவர்களுக்குக் கிட்டி இருக்கிறது. அதை, அவர், நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கான திறமை அவருக்கு நிரம்ப உண்டு என்பதை நாம் அறிவோம். அதுவுமன்றி, அப்பணியினைச் செய்தே ஆகவேண்டிய கட்டாயத்திலும் அவர் இருந்து வருகிறார்.

"மாதம் மும்மாரி பெய்கிறதா?" என்று மந்திரியைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டிய தன்மையில் இருந்ததாகக் கூறப்படும் நிலையில் அல்லவா, பண்டித நேரு இருக்கும் டெல்லிக்கும், திராவிடப் பெருங்குடி மக்கள் இருக்கும் சென்னைக்கும் உள்ள தொடர்பு இருந்துவருகிறது? எனவே, தான் முதலமைச்சராக இருக்கும் நாட்டின் நிலையை விளக்கிக் கூற வேண்டிய பொறுப்பும் கடமையும் கனம் காமராஜருக்கு இருந்து வருகிற காரணத்தினால், திராவிடர்களின் அபிலாஷைகளை, பண்டிதரிடம் தூது சென்று சொல்லுமாறு, அவரை நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

முன்னொரு சமயம் பண்டிதர் இங்கு வந்தபொழுது, அதுகாலை முதலமைச்சராக இருந்த ஆச்சாரியார் அவர்களும், நமது திராவிட உரிமை வேட்கையைக் குறித்து—விகாரப்படுத்தியேதான்— அவரிடம் கூறி இருக்கிறார். அதுகேட்டு பண்டிதரும், 'காட்டுமிராண்டிகளிலும் கடை கெட்டவர்கள்' என நம்மை அர்ச்சித்தும் இருக்கிறார். உத்தமர் காந்தியாரைக் குறித்து 'அரை நிர்வாண பக்கிர்' என்றுதானே சர்ச்சில் துரைமகனார், அன்று ஒருநாள் கூறினது நமது நினைவுக்கு வரவே, 'அதிகாரத்தின் பெருங்குணம்' அப்படித்தான் இருக்கும் என நாம் தீர்மானித்துக் கொண்டு, பண்டிதர் அர்ச்சனையையும் மறந்து ஒதுக்கிவிட்டோம்.

ஆச்சாரியாரைப் போன்றே, அவர் சீற்றத்தைக் குத்திக் கிளறும் தன்மையில் பண்டிதரிடம் நம்மைக் குறித்துக் கூறுவதற்குக் கனம் காமராஜர் முனைவாராக இருந்தாலும், நாம் அதன் விளைவை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். உரிமைக்காக சுடுசொல்லை—அதிலும் உரிமைப் போர் பல கண்ட ஒருவரிடமிருந்து பிறக்கும் இழிமொழியை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாமலா போகும்? ஒருக்காலும் இல்லை.

திராவிடம் விடுபட, எப்பழியையும்—அது எவரிடமிருந்துவருவதாக இருந்தாலும் நாம் என்றென்றும் தாங்கிக் கொண்டு, வெற்றிக்குப் போராடத் தயாராக இருக்கிறோம். இந்த உண்மையையும், பண்டிதரிடம், பக்குவம் தெரிந்து, தெளிவுபட கனம் காமராஜர் விளக்கிக் கூறவேண்டும்.

கல்லக்குடி 'பெயர் மாற்ற அறப்போரையும், அமைச்சராக இருந்து ஆச்சாரியார் அவர்கள் ஆடிய நரவேட்டையையும், திரு-கொச்சி தமிழகம் தாய்த் தமிழகத்துடன் சேர்ந்திடத் துடிக்கும் துடிதுடிப்பையும், கனம் காமராஜர், பண்டிதரிடம் கண்டிப்பாகக் கூறியாக வேண்டும். இதனால் பரிகாரம் கிடைத்தாலும், கிடைக்காமற் போனாலும், திராவிடத்தில் புயல் வீசுவதற்கு முன்பாக, கனம் காமராஜர் எச்சரிக்கை செய்துவிட்டார் என்ற ஒரு நற்பெயராவது அவருக்குக் கிட்டும் என்பதில் துளியும் ஐயமில்லை. ஆவடி மாநாட்டினால் கிடைத்துள்ள மகத்தான வாய்ப்பைக் கைநழுவவிடாமல் நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு கனம் காமராஜர் அவர்களை மறுமுறையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியவர்கள்!

திரு-கொச்சியில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியில் அமருமாம்!

கூட்டு மந்திரி சபையில் கம்யூனிஸ்டுகள் இடம் கேட்கிறார்களாம்

திரு—கொச்சி மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி பதவியேற்பதற்கான சகல ஆயத்தங்களும் முடிவடைந்துவிட்டனவாம். அண்மையில் ஆலப்புழையில் நடைபெற்ற மாநாட்டில் அமைச்சரவை அமைவதற்கான வழிகள் ஆராயப்பட்டதாகவும், கட்சியின் பலத்தை எந்தெந்த விதங்களில் பேலும் வளர்ப்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

இராஜப்பிரமுகருடைய பேருரையின்மீது தோழர் டி. எஸ் இராமசாமி திருத்தம் ஏதும் கொண்டுவரப்படலாமென்றும், அந்தத் திருத்தத்தைக் காங்கிரசும், கம்யூனிஸ்டுகளும் ஆதரிக்கவேண்டிய நிர்ப்பந்த நிலைகள் ஏற்படலாமென்றும், அதுமட்டுமல்லாமல், தனது திருத்தத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த டி. எஸ். இராமசாமி வற்புறுத்துவதாக இருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

பி. சோ. கட்சி முதலமைச்சர் பட்டம் தாணு, புதிய மந்திரி சபை அமைப்பதற்கான முயற்சியில் ஐக்கிய முன்னணியுடன் ஈடுபடமாட்டார் என்றும், அப்படி மந்திரி சபை அமைப்பதில் அவருக்கு நம்பிக்கையே இல்லை என்று ம. சோ. கட்சி வட்டாரங்கள் அறிவித்திருப்பதாகவும், பி. கே. குஞ்சுதான் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைச்சரவை அமைக்க அதிதீவிரமாக சிரத்தை எடுத்துக் கொள்கிறார் என்றும் கூறப்படுகிறது.

கூட்டு மந்திரி சபை ஒன்று அமைத்து, தங்களுக்கு அந்த மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் கிடைத்தாலன்றி கம்யூனிஸ்டுகள் பட்டம் தாணுப் பிள்ளையை ஆதரிக்கப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்டதாம்!

இவ்வித சிக்கல்களிடையே பட்டம் தாணு சர்க்கார் தொடர்ந்து பதவியிலேயே நீடித்திருக்க வேண்டுமென்பதற்கான பாதைகள் மூடப்பட்டு விட்டன என்று விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ம. சோ. கட்சி மந்திரி சபையின் தோல்விக்குப் பிறகு, காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒரு மந்திரி சபை அமைக்கலாமென்றும், சட்டசபையில் அதிக எண்ணிக்கை உள்ள காங்கிரசுக்கும் தோல்வி ஏற்பட்டால் மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தலாம் என்றும் காங்கிரஸ் வட்டாரங்கள் கருதிக் கொண்டிருக்கின்றனவாம்!

கனடாவின் உதவி:

நமக்கல்ல — அவர்களுக்கு!

புதுடில்லி, ஜன. 11—

அசாமில் உம்த்ரு தண்ணீர்—மின்சார திட்டத்தை நிறைவேற்றுவதில், இந்தியாவின் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 150 லட்ச ரூபாயுடன், மேற்கொண்டு பொருள் உதவி செய்ய கனடா முன்வருமாம்.

சுமார் 50 லட்சம் ரூபாய் மதிப்பிடக் கூடிய மின்சார, இயந்திர சாதனங்களையும், இதர எஞ்சினீயரிங் சம்பந்தப்பட்ட உதவிகளையும் கனடா அளித்துவரும் என்றும், அத்துடன், திட்டத்திற்காகும் செலவில் 100 லட்ச ரூபாய்வரைக்கும் கனடா ஏற்றுக்கொள்ளும் என்றும், இந்தத்தொகை, கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கனடிய தொழில்துறை மூலப் பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சரிக்கட்டப்படுமெனவும் தெரிய வருகிறது.

ரூ. 80,000 திட்டம் ரூ. 8,000-த்தில் முடிந்தது!

இந்தூர், ஜன. 13—

மத்திய பாரத் மாநிலத்தில் ரூ. 80 ஆயிரம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்த வேலை ஒன்றினை மத்திய மின்சார விநியோக நிலையத்தில் மேற்பார்வை அதிகாரி ஒருவர் ரூ. 8 ஆயிரத்தில் செய்து முடித்து சர்க்காருக்கு 72 ஆயிரம் மிச்சப்படுத்திக் கொடுத்தாராம்.

கடந்த 1953 மே மாதம் 16-ந் தேதியன்று ஒரு ஆபத்தான விபத்தொன்றில் விலையுயர்ந்த மின்சார இயந்திரம் ஒன்று பாழாகிவிட்டது. எவ்வளவு சேதமாகியிருக்கும் என்பதை அங்கிருந்தவர்களால் மதிப்பிட முடியவில்லையாம். பம்பாயில் உள்ள பிரபல மின்சார சாதன வர்த்தக நிலையம், அந்த இயந்திரத்தைப் புதுப்பிக்க ரூ. 73 ஆயிரம் முதல் ரூ. 80 ஆயிரம் செலவாகுமெனக் கோரியிருந்ததாம்.

அமர் சிங் என்ற அந்த மின்சார இலாகா மேற்பார்வை அதிகாரி இயந்திரத்தைப் புதுப்பிக்கும் யோசனையைக் கைவிடுமாறு தன் இலாகாவினரிடம் கூறிவிட்டு, பாழ்பட்ட இயந்திரத்தை, தாமே புதுப்பிக்க முயற்சித்தாராம். அவர் மாதக் கணக்கில் வேலை செய்து, கடந்த மார்ச் மாதத்தில் இயந்திரத்தைப் பழுது பார்த்து முடித்து வைத்தாராம்.

ரூ. 8 ஆயிரம் செலவில் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டு, முன்பைக் காட்டிலும் அதிகமான சக்தியுடன் இப்போது வேலை செய்து வருகிறதாம். இவரது நுணுக்கமான சேவையைப் பாராட்டி மத்திய பாரத் மாநில சர்க்கார் அவருக்கு ரூ 1,000 பரிசுத் தந்திருப்பதுடன், கடமையைத் திறமையுடன் செய்தவர் என்ற பெருமையையும் அளித்திருக்கிறதாம்.

கைத்தறித் துணி விற்பனை

சென்னை:

12—1—55 மாலை 4 மணியிலிருந்து இரவு 12-45 வரையில் 43, 37-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் கழகத் தோழர்கள் மீர்சாகிப்பேட்டை, இராயப்பேட்டை தெருக்களில் கைத்தறித் துணிகளை விற்பனை செய்தனர். மொத்த விற்பனை ரூ 558-13-0 ஆகும். இரவு நேரத்திலும் பொது மக்கள் காத்திருந்து கைத்தறித் துணிகளை வாங்கியது பாராட்டத் தக்கதாகும்.

* * *

9—1—55 காலை 11 மணிக்கு சென்னை 9-வது வட்டம் (ஏழு கிணறு) கழகப் பணிமனையிலிருந்து தோழர் வி. முனுசாமி தலைமையில் மேளவாத்தியங்களோடு கழகத் தோழர்கள் ஊர்வலமாகத் தெருக்கள்தோறும் சென்று ரூ. 500-க்கு மேல் கைத்தறித் துணி விற்பனை செய்திருக்கின்றனர்.

* * *

சென்னை 29, 30, 31-வது வட்ட தி. மு. கழக கிளைகளின் சார்பில், 9—1—55 காலை 9 மணி முதல் பகல் 1-30 வரை முக்கிய வீதிகள்தோறும் கழகத் தோழர்கள் கைத்தறி துணி விற்பனை செய்தனர். மொத்த வசூல் ரூ. 379—15—0 என்று அறிவிக்கப்படுகிறது.

திருவாரூர் :

8, 9—1—55 நாட்களில், திமு கழகத் தோழர்கள் ஒலிபெருக்கியுடன் வீதிகள்தோறும் சென்று கைத்தறி துணிகளை விற்பனை செய்தனர். விற்பனை மொத்தம் ரூ. 815—12—6.

மேலவாழக்கரை :

8—1—55 முதல் 13—1—55 வரை நாகை தாலுகா மேலவாழக்கரை தி. மு. கழகத் தோழர்கள் ரூ. 461—3—10-க்கு கைத்தறி துணிகள் விற்பனை செய்தனர்.

கோபி :

9—1—55-ல் கோபி நகர வீதிகளில், தி. மு. கழகத் தோழர்களால் 'கைத்தறி தினம்' கொண்டாடப்பட்டது. தோழர்களனைவரும் தெருத் தெருவாகச் சென்று சுமார் ரூ 400-க்கு கைத்தறி துணி விற்பனை செய்தனர்.

சித்கல் :

9—1—55ல் இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் கூட்டுறவு கைத்தறி துணிகள் வாங்கி அவற்றை தெருத் தெருவாகச் சென்று ரூ. 211—10—9-க்கு விற்பனை செய்தார்கள்.

வலங்கைமான் :

13—1—55-ல், தி. மு. கழகத் தோழர்கள் கைத்தறி துணியை விற்பனை செய்தனர். மொத்தம் விற்பனையான தொகை ரூ. 271—13—0.

குடந்தை :

குடந்தை நகர தி. மு. க. கிளையின் ஆதரவில் கைத்தறித் துணி விற்பனை நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் விற்பனையைத் தொடங்கி வைத்தார். சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

சூலூர் :

9—1—55 பகல் 12 மணிக்கு இவ்வூர் தாளமுத்து நடராசன் படிப்பகச் சார்பில் கைத்தறியாளர் வாரம் கொண்டாடப்பட்டது. தோழர் எஸ். எ நாச்சிமுத்து தலைமையில் கைத்தறித் துணிகளுடன் ஊர்வலமாகச் சென்று ரூ 223—1—6-க்கு துணி விற்பனை செய்தனர்.

1953 அக்டோபர் மாதத்திலிருந்து 1954 மார்ச் மாதம் வரையுள்ள காலத்தில் மத்திய சர்க்கார், தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் சமூகக் கல்விக்காக மொத்தம் 2,41,080 ரூபாய் செலவழித்தனர்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

★

சென்னை

14—1—55 காலையில் 43-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் செயலாளர் மு. புரட்சிமணி கழகக் கொடியினை ஏற்றுவித்தார். பின்னர் தோழர் ஈ மணி தலைமையில் பலர் விழாவின் முக்கியத்துவம் குறித்து சொற்பொழிவாற்றினர். பிற்பகலில் 500-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு கழகச் சார்பில் கஞ்சி ஊற்றப்பட்டது.

* * *

14—1—55ல், 5-வது வட்ட தி. மு. கழகத்தை அலங்கரித்து புதுக் கொடியேற்றி, சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டு, உண்டியல் மூலம் நிதி வசூலித்து அன்றுமாலை நடைபெற்ற திராவிடர் திருநாளில் மேற்படி தொகையான ரூ. 15—3—6 மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

* * *

சென்னை-21, வண்ணையம்பதி தி. பெ. சாலை (தியாகராய கல்லூரி சமீபம்) 131-ம் எண் இல்லக் கொடி மரத்தில் தோழர் தி. கு. பலராமன் உதவியாலும், இளந்தென்றல் முயற்சியாலும் 14-1-55 காலை 7 மணிக்கு தி. மு. கழகக் கொடி ஏற்றப்பட்டது. பல நண்பர்களின் உதவியால் நூற்றுக் கணக்கான சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரியில் தமிழ்க் கலைக் கழக 4-ம் ஆண்டு விழாவும் பொங்கல் விழாவும் திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன், எஸ் ஆர். சுப்பிரமணியம், கணேச பாண்டியன், டபிள்யூ ஈ. வேலாயுதம், வே. கபிலன் ஆகியோர் கலந்துகொள்ள விழா இனிது நடைபெற்றது

* * *

இராயபுரம் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் தோழர் க நாராயணசாமி தலைமையில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது தோழர்கள் வி. கே. சாமி, தி. முத்தரசன் ஆகியோர் பொங்கல் விழா உழவர்கள் விழாவாயினும் தமிழர்களால் கொண்டாடப்படும் பெருவிழாவென்று குறிப்பிட்டனர். மன்றத்தின் சார்பில் 300 பேருக்கு உணவு அளிக்கப்பட்டது.

திருமங்கலம்

இந்நகர் தி. மு. கழகத்தின் உட்கிளையாகிய நெடுஞ்செழியன் மன்றத்தின் சார்பில் விழா கொண்டாடப்பட்டது கிராம நடனம் தெருத் தெருவாக ஆடப்பட்டும், இயக்கப்பாடல் பாடப்பட்டும் இரவு 2 மணிக்கு முடிந்தது.

பரவை

14—1—51 காலை 10 மணிக்கு பரவை தாளமுத்து — நடராசன் நினைவுப் படிப்பகத்தின் (தி. மு. க கிளை) சார்பில் விழா கொண்டாடப்பட்டது. ஊரின் பல முக்கிய தெருக்களில் கொடி, தோரணங்களால் அலங்கரித்தும், கழகத்தின் முன்பாக விசேட அலங்காரமும் செய்யப்பட்டிருந்தது. விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சேலம்— அம்மாபேட்டை

14—1—55ல், சேலம்—அம்மாபேட்டை 22-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் எஸ். என். எல்லப்பன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் இரா. மாரியப்பன், இரா. ரங்கநாதன், அணுகுண்டு ஆறுமுகம், கே. ஆர். சித்தன், எஸ். ரத்தினம், ப. முருகன் ஆகியோர்சொற்பொழிவாற்றினர். சிறுர்களுக்கு சர்க்கரைப் பொங்கலும் ,கரும்பும் வழங்கப்பட்டது.

கணியூர் :

14—1—55 மாலை தி. மு. கழகச் சார்பில், தோழர் நாராயணசிங் தலைமையில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. எ. மதியழகன், இரா. சு. தங்கப்பழம், பழனி, தமிழரசன் ஆகியோர் விழா பற்றியும், தற்கால அரசியல் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

எண்கண் :

14—1—55ல், மேளவாத்தியத்துடன் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் வந்து, தி. மு. கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. பின்னர், பொதுமக்களுக்கு வெற்றிலை, பழம், இனிப்பு ஆகியவை வழங்கப்பட்டது.

ஊத்துக்குளி :

தாலிகட்டிபாளையத்தில், தி மு. கழகச் சார்பில், 14—1—55 காலை 10 மணி அளவில், விழா ந. சி கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. பழனிச்சாமி கொடியேற்றி விழாவாற்றினர். தோழர்கள் ச சரவணமுத்து, சா. கைத்தமலை, ச. முருகேசன், சி. நடராஜன், ப. முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

வடக்கநந்தல் :

வடக்கநந்தல் அருகிலுள்ள வெங்கட்டம்மாபேட்டை கிராம துவக்கப் பள்ளியில் 14—1—55 பிற்பகல் விழா கொண்டாடப்பட்டது தோழர் ரெங்கசாமி தலைமை தாங்கினர் ; தோழர் சி. இரங்கசாமி வரவேற்றார் ; தோழர்கள் : க. பெ. நெடுமாறன், தங்கவேல்,

மாண்ட மிருகங்களின் இறைச்சி கால்நடைகளுக்கு உணவாகும்

சென்னை நிபுணரின் கண்டுபிடிப்பு

சென்னை, ஜன. 17—

சென்னையில் கால்நடை வைத்தியக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் டாக்டர் எஸ். டி. வில்சன், இறந்து போன கால்நடைகளின் இறைச்சியைப் பயன்படுத்த உதவும் பொருட்டு புதிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இப்போதெல்லாம் கால்நடைகள் இறந்து போனால் அவைகளின் தோல்மட்டுமே பயன்படுகிறது அவைகளின் இறைச்சி வீணுகிறது

டாக்டர் வில்சன் புதிதாகக் கண்டுபிடித்துள்ள இயந்திர அமைப்பின் மூலம் இறந்துபோன கால்நடைகளின் இறைச்சியைப் பக்குவப்படுத்தி, அவைகளை மீண்டும் கால்நடைகளுக்கு உணவாக்க ஏற்பாடு செய்ய முடியும்.

இந்தியாவில் இதுபோன்ற இயந்திர அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை. 'டாக்டர் வில்சன் அப்பாரடெஸ்'என்னும்அமைப்பை சென்னை சர்க்கார் கால்நடை இலாகா அமைச்சர் பக்தவத்சலம் பார்வையிட்டிருக்கிறார்.

இப்போது சென்னை கால்நடை வைத்தியக் கல்லூரியின் வெள்ளி விழா நடைபெறுகிறது. இந்த விழாவைத் துவக்கிவைக்கும் பண்டித நேரு இப்புதிய இயந்திர அமைப்பைப் பார்வையிடுவார் என்று தெரிகிறது.

இப்புதிய அமைப்பு பயன்படுத்தப்பட்டால் இதன் மூலம் இந்தியாவில் ஆண்டுதோறும் ரூ 20 இலட்சம் பெறுமான உணவுப் பொருள்கள் கால்நடைகளுக்குக் கிடைக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. (ந-நி)

கழகச் செய்திகள்

பம்பாய்—தாணு

தி. மு. கழகக் கிளை

25—12—54 மாலை 5 மணியளவில் தோழர் பென்னியமேன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டதுடன் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: வைதீகசங்காரன்; துணைச் செயலாளர்: எம். இராசகோபால்; பொருளாளர்: எஸ். வி. மலை; மாவட்டப் பிரதிநிதிகள்: வைதீக சங்காரன், ஆர். நம்பிநாராயணன். செயற்குழு உறுப்பினர்கள்: பி. மாடசாமி, ஆர். நம்பிநாராயணன், கே. எம். பாண்டியன், சி. எல். பதி, செல்லப்பெருமாள், வி. நம்பி, கிருஷ்ணன், எல். என். சாமி, நெல்லை வாணன்.

கும்மிடிபூண்டி வட்டத்தில் பிரசாரக் கூட்டம்

2—1—55 இரவு 7 மணிக்கு, கும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில், இதற்கருகிலுள்ள தேர்வா சிற்றூரில், தோழர் கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழகப் பிரசாரக் கூட்டமொன்றில், தற்கால பொருளாதார நிலை, கடவுள், மதம் ஆகியவற்றினுள் மூடக் கொள்கைகள், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியம் ஆகியவை பற்றித் தோழர்கள் ஆ. கிருஷ்ணன், ப. செ. தூயமணி, ஈ. எஸ். மணி, இசையரசு, இராதாமணாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய்-கொலாபா தி.மு.க.

3—1—55ல் பம்பாய், கூபரேஜ் திடலில், தோழர் எஸ். பி. பெருமாள் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்களின் மாதாந்திரக் கூட்டத்தில்; புத்தாண்டு கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பு பற்றியும், மூன்று மாத வரவு—செலவு கணக்குகளும் முடிவு செய்யப்பட்ட பின், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், தோழர் கே. ஆர். இராமசாமி அவர்களின் தாயார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அல்லி நகரம் தி. மு. க.

4—1—55ல், தோழர் கோ. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இ முஸ்தபா, அ. செகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், 200-க்கு மேற்பட்டவர்கட்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பெற்றது.

அம்மன்புரம் :

14—1—55ல், தி. மு. கழகத் தோழர்கள் கழகக் கொடியுடன் ஊர்வலம் வந்தனர் ; சிலம்பு அடித்தல், சடுகுடு, கயிறு இழுத்தல், ஓட்டப் பந்தயம் முதலியன நடைபெற்றன. பின்னர், இனிப்பு வழங்கப்பட்டது. மாலை 5 மணிக்கு தோழர் மு. செல்வன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. இலக்குமணன் பொங்கல் விழா பற்றி பேசினர்.

திருச்சி—துறையூர் :

14—1—55 காலை தி. மு. கழகச் சார்பில், கழகக் கட்டிடத்தில், இனிப்பு வழங்கப்பட்டது. பாட்டு, கோலாட்டம், பேச்சு, போட்டி நடைபெற்று, பரிசுகள் வழங்கப்பட்டது.

ஆமதாபாத் தி. மு. கழகப் பொதுக் குழு

9—1—55 மாலை 4½ மணிக்கு, ஆமதாபாத் நகர தி. மு. கழக பொதுக் குழு, தோழர் ஆர். கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, செயலாளர் இரா. வைத்திலிங்கம் தாயகம் செல்வதால், அவர் திரும்பிவரும்வரை, நகர தி. மு. கழகப் பொதுக் குழு பொறுப்பை துணைச் செயலாளரிடம் ஒப்புவிக்கப்பட்டதுடன் மற்றும், சில முடிவுகள் செய்யப்பட்டது.

சித்துக்காடு தி. மு. கழக துவக்க விழா

10—1—55-ல், இவ்வூரில், பேராவூரணி தோழர் பி. வடிவேலு தலைமையில் தி. மு. கழகம் நிறுவப்பட்டு, கழக உறுப்பினர்களும், நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஏ.எம். செயச்சந்திரன்; துணைச் செயலாளர்: ஆர். கந்தையா; பொருளாளர்: கோவி. இளந்திரையன்; செயற்குழு உறுப்பினர்கள்: எம். ஏ. அப்துல் ரகீம், பி. எல். முருகன், ஆர். முத்து, எஸ். பழனிவேல், ஈ. நல்லதம்பி, கே. முனியன், ஆர். பெரிச்சியப்பன்.

பாபநாசத்தில் தி. மு. க. துவக்க விழா

இவ்வூர் தி மு. கழகக் கிளையின் துவக்க விழா 11—1—55 மாலை 6 மணியளவில் மேல வீதியில் தோழர் என். சி. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இது வரையில் பாபநாசம் கண்டிராத அளவுக்கு மக்கள் கூடியிருந்தனர். தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்குக் கழகச் சார்பில் செயலாளரால் கைத்தறி ஆடை மாலையாக அணிவிக்கப்பட்டது. மற்றும் பல கிளைக் கழகங்களின் சார்பிலும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. பின்னர் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து, கழகத்தின் நோக்கம், நாட்டு பிரிவினை, பார்லிமெண்டரி என்பன பற்றி சொற்பொழிவாற்றினுர்.

கரிசல்பட்டியில் கழக— படிப்பக துவக்க விழா

14—1—55 மாலை 6 மணியளவில் திருமங்கலம் வட்டம் கரிசல்பட்டி கிராமத்தில் தி. மு. கழக துவக்க விழாவும் அண்ணு படிப்பக துவக்க விழாவும் நடைபெற்றது. தோழர் க. ம. வ. நடராசன் அண்ணு படிப்பகத்தைத் திறந்து வைத்து, படிப்பகமும், பயனும் பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர் தயாளன் கழகக் கொடி ஏற்றிவைத்தார். பின்பு முத்தாலம்மன் கோவில் திடலில் தோழர் சிக்கனன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அப்துல் ரசாக், பிச்சை, வேலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பரவை தி. மு. கழகம்

14—1—55 மாலை தி. மு. கழக செயற்குழு கூட்டம் தோழர் க. கார்மேகம் தலைமையில் நடைபெற்றபோது, புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் : செயலாளர்: சா. பிச்சை; துணைச் செயலாளர் : க. திருஞானம் ; பொருளாளர்: துரைப்பாண்டி; மாவட்டப் பிரதிநிதி: ப. கார்மேகம் ; விளம்பர உறுப்பினர்கள் : பழனிவேலு, கார்மேகம்; செயற்குழு உறுப்பினர்கள்: மாரியப்பன், பஞ்சாட்சரம், மார்நாடு முருகன், அருணசலம்.

ஆவடியில் காங்கிரசின் 60-வது மாநாடு

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் 60-வது மாநாடு சென்னையை அடுத்துள்ள ஆவடியில், 1955-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 17-ம் நாள் முதல் துவக்கியுள்ளது.

27 ஆண்டுகட்குப் பிறகு தென்னாட்டில் இப்போதுதான் காங்கிரஸ் மாநாடு கூட்டப்படுகிறது.

மாநாடு நடைபெறுவதற்காக, ஏராளமான பொருட் செலவில் 'சத்தியமூர்த்தி நகர்' உருவாக்கப்பட்டுள்ளது.

185 ஏகர் பரப்பில் மாநாட்டுப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. பந்தலின் முகப்பில் மிகச் சிறந்த திராவிட கலைத் திறனுடன் கூடிய கோபுரம் இடம் பெறுகிறது.

மாநாடு நடைபெறும் இடத்திற்கு தனியாகவே ஒரு புகைவண்டி நிலையமும், புதிய சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மாநாடு அகில இந்திய காங்கிரசின் வேறெந்த மாநாட்டினைக் காட்டிலும் சிறந்தது எனக் கொள்ளப்படுவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று இந்த மாநாட்டில்தான் இதுவரை காங்கிரசின் தலைவராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு தலைவர் பதவியினின்றும் விலகிக் கொள்வதுடன், அறிமுகமே இல்லாத யூ. என். தேபர் என்பவர் தலைவராக்கப்பட்டிருப்பது; மற்றொன்று, அதே நேரத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

தமிழ் நாடு காங்கிரசின் தலைவராகப் பல்லாண்டு பணி புரிந்து வந்த காமராசர் சென்னை முதன் மந்திரியாகி இருப்பதையொட்டி, அவர் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதுடன், காங்கிரசின் சரித்திரத்திலேயே முதன் முதலாக, தமிழகத்தில்தான் ஒரு 'அரிசன்' வகுப்பைச் சேர்ந்தவர் தலைவராக்கப்பட்டிருக்கிறார் என்பதாகும்.

மேலும், அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக ஒரு பெண்மணியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதையும் கூறுகிறார்கள்.

மாநாட்டில், சுமார் 3,000 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து சுமார் 300 - பேர்கள் கலந்து கொள்வார்களாம்.

மாநாட்டுத் தலைவரான தேபர் கடந்த 16-ந் தேதியன்று மாலை சென்னை வந்து சேர்ந்திருக்கிறார்

இதுவரை காங்கிரசின் தலைவராயிருந்து, இப்போது விலகிக் கொள்ளவிருக்கிற பண்டித நேரு 15-ந் தேதியன்று மாலை சென்னை வந்துவிட்டிருக்கிறார்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் சின்னாள் முன்புவரை ஆதிக்கஞ் செலுத்திவிட்டு இப்போது அந்த ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தை அவர் கையில் தந்துவிட்டுப் போயிருக்கிறதல்லவா? அந்த புதுவைப் பகுதிக்குப் பண்டிதர் சென்று அங்கு வழக்கம்போல எல்லா மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு சென்னைக்குத் [illegible]பியிருக்கிறார்.

[illegible] தேதியன்று காலை சென்னை[illegible] நகரசபை 'ஸ்டேடியத்தில்' [illegible]ந்தைகளடங்கிய கூட்டமொன்றிலும் அவர் கலந்துகொண்டார்.

பின் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடை கண்காட்சி ஒன்றினையும் திறந்து வைத்துப் பேசியிருக்கிறார்.

காங்கிரஸ் நடைமுறை கமிட்டிக் கூட்டம் 17-ந் தேதி பிற்பகல் கூடி "சோஷலிச பொருளாதார அடிப்படையில் க்ஷேமநல நாட்டினை அமைப்பதுதான் காங்கிரசின் லட்சியம்" என்பதை விளக்கும் இரண்டு பிரரேபணைகளை நிறைவேற்றியுள்ளதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நாட்டின் எதிர்காலத்திற்கு எவ்வளவு பயன்படவிருக்கிறது என்பது குறித்தும், அத்திட்டத்தின் அடிப்படை சமதர்ம சமுதாயத்தை உருவாக்க உதவும் வகையில் அமையும் என்றும் காங்கிரஸ் இந்த ஆவடி மாநாட்டின் போது தெளிவுபடுத்திக் கூறுமாம்.

மேலும், பொதுவாக உலக விஷயங்களிலும், குறிப்பாக ஆசிய விவகாரங்களிலும் பண்டித நேரு கடைபிடித்து வரும் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரித்தும் மாநாடு தீர்மானம் நிறைவேற்றுமாம்.

மாநாட்டுப் பந்தலுக்கு சத்தியமூர்த்தியின் பெயர் வைத்திருப்பதாலும், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவியாக, திருமதி அம்புஜம் அம்மாள் என்ற பெண்மணியைத் தேர்ந்தெடுத்ததின் மூலமாகவும் காலஞ்சென்ற இரு பிரபல தென்னாட்டு காங்கிரஸ்காரர்களின் சேவையையும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்களாம் காங்கிரசார்.

'பெற்றோர்கள் கொடுமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுக'

'பெற்றோர்களைப் பயிற்றுவிக்கும் படங்கள் தேவை'

'விஞ்ஞான அறிவூட்டும் சினிமாக்களை நாங்கள் காண வேண்டும்'

குழந்தை உலகில் பெரும் புரட்சி!

புதுடில்லி, ஜன. 17—

தங்கள் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தாமல், தண்டிக்காமல், அடிக்காமல் வளர்க்க, பெற்றோர்களுக்கு அறிவுறுத்தும் சினிமா படங்களில் சிலவற்றை நாங்கள் காண ஏற்பாடு செய்யுங்கள். இப்படி ஒரு சிறு குழந்தை, கலாசார சினிமா குழுவின் தலைவராக உள்ள இந்திரா காந்திக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

வேறு ஒரு குழந்தை 'கம்பியற்றத் தந்திச் செய்திகள் எப்படி அறிவிக்கப்படுகின்றன? நிலவின் அருகாமையில் மக்கள் செய்வது எவ்வாறு?' என்பன போன்ற விஞ்ஞானப் படங்களை நாங்கள் பார்க்க கூடிய விரைவில் ஏற்பாடு செய்யுங்கள்' என்று எழுதியுள்ளது.

மேற்படி கலாசாரப் படக் குழு, அண்மையில் நடைபெற்ற குழந்தை சினிமாப் படக் கண்காட்சியின்போது உருவாக்கப்பட்டதாகும்.

கல்லூரி பட்டப் படிப்பு

கல்லூரி பட்டப் படிப்புக் காலத்தை 3 ஆண்டுகளாகவும், கல்லூரியில் சேருவதற்கான குறைந்தபட்ச வயதை 17 ஆகவும் மத்திய கல்வி ஆலோசனைக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

'அழிவு'க்கல்லவே!

உலகிலேயே முதன் முதலாக, அணுசக்தி உதவியால் இயங்கும் சப்மரீன் ஒன்று, கிராட்டன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, வெள்ளோட்டம் விடப்படுகிறது.

சமரசம் கண்டனர்!

மதுரை மில்லிலுள்ள நூற்புப் பிரிவைச் சேர்ந்த சுமார் 200 தொழிலாளர்கள் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் முடிவடைந்தது. மாநில தொழிலாளர் நல கமிஷனர் வி. பாலசுந்தரம் செய்த சமரச ஏற்பாடொன்றில், மில் நிர்வாகிகளும், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனராம்.

மீண்டும் தொழிலாளர்கள் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்வார்கள் என்றும், வேலை நிறுத்தக் கால தண்டனையாக ஊதியம் எதுவும் குறைக்கப்படாதென்றும், ஆனால் வேலை எதும் இல்லாத காலத்தில் அத்தொழிலாளருக்கு ஊதியம் தரப்படமாட்டாது என்றும் கூறப்படுகிறது.

பரந்த நோக்கம்?

சீன மக்கள் குடியரசு நாடு உட்பட 5 கம்யூனிஸ்டுச் சார்பு நாடுகளுக்கு, ரஷ்யா, ஆக்க வேலைகளுக்கான அணு சக்தியைத் திரட்ட உதவி செய்யும் என்று கூறப்படுகிறது.

ரஷ்யா, அணுசக்தி உதவிகளில், மூலப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக அணுசக்தி ஆராய்ச்சிக்கு அத்தியாவசிய மானவற்றைக் கொடுக்கும் என்றும், சோவியத் யூனியனில் உள்ள அணுசக்தி நிலையத்தைப்போலவே மற்ற 5 நாடுகளுக்கும் கட்டித் தரப்படும் என்றும் ரஷ்யா அறிவித்திருக்கிறதாம்.

புதிய ஜவுளிக் கடை ஆரம்பம்

சென்னையில் காஞ்சீபுரம் விலைக்கு பட்டு & சரிகைப் புடவைகள் விற்கப்படும்

'கந்த விலாஸ்' அ. கந்தசாமி முதலியார் சன், 213, தங்கசாலை தெரு, சென்னை — 1 (இராமர் கோயில் எதிரில்)

தலைமை அலுவலகம்: காஞ்சீபுரம் போன் எண்: 12

கிளை அலுவலகங்கள்: திருநெல்வேலி போன் எண்: 121 | சேலம் போன் எண்: 123 | சென்னை போன் எண்: 4676

மூன்று மாதத்தில்!

புதுச்சேரி, ஜன. 17—

இன்னும் 3 மாதங்களுக்குள், புதுச்சேரி மாநிலத்தில் பொதுத் தேர்தல் நடக்கும் என்று அறியக் கிடக்கிறது.

மைசூர் மாநில தேர்தல் கமிஷனராகப் பணியாற்றுபவரே இங்கும் இருப்பார் என்றும், இத்தேர்தல் நடந்து முடியும் வரையில், ஒரு இடைக்கால மந்திரி சபை அமைக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

திராவிடர் திருநாள் பொதுக்கூட்டம்

17—1—55 மாலை 6½ மணி அளவில், இராயபுரம் மீனாட்சியம்மன்பேட்டையில், வடசென்னை தாளமுத்து — நடராசன் முன்னேற்ற மன்றச் சார்பில், தோழர் காஞ்சி–கல்யாணசுந்தரனார் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மூக்கை ஆர். எஸ். பாண்டியன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் ஆனந்தன் அவர்களது மகளுக்கு, கண்ணதாசன் அவர்களால் 'மாங்கனி' என்று பெயர் சூட்டப்பட்டது.

கூட்டம் முடிவில், வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தாருக்கும், சென்னை 3-வது வட்ட தி. மு. கிளைக் கழகத்தாருக்கும், மறைந்த வீரர் கே. எஸ். பாண்டியன் அவர்களது சகோதரர் அருணாசலம் அவர்கட்கும் மன்றச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டிருந்த சர்க்கரைத் தட்டுப்பாட்டை சமாளிக்கும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டதின் காரணமாக 1954-ம் ஆண்டில் சர்க்கரை மீது இறக்குமதி வரியின் மூலம் மொத்தம் 10.82 கோடி ரூபாய் கிடைத்தது; 1953-ல், இவ்வகையில் வசூலிக்கப்பட்ட தொகை மொத்தம் 3.73 கோடி ரூபாய் ஆகும்.

போலீஸ்காரருக்கு தூக்கு தண்டனை

தனக்கு 'விஷம்' கொடுத்ததாக பெண்ணை சந்தேகித்துக் கொலை செய்தாராம்!

கோழிக்கோடு செஷன்ஸ் நீதிபதியான திரு. ஒ. சந்து மேனன் என்பவர், மங்காரா போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த மூத்தாரன்குட்டி என்ற போலீஸ் கான்ஸ்டபிள் கடந்த அக். 16-ந் தேதியன்று கோசி என்ற 27 வயது பெண்மணியைச் குத்திக் கொன்றமைக்காக தூக்குத் தண்டனை விதித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

தன்னைக் காதலிக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பெண் தனக்கு ஏதோ 'விஷம்' கொடுத்துவிட்டதாகச் சந்தேகப்பட்டு, மருத்துவர் ஒருவரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்ட அந்த போலீஸ்காரர், அந்தப் பெண்ணைக் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டு இரத்தம் தோய்ந்த கத்தியுடன் போலீஸ் நிலையத்தில் சரணடைந்ததாகவும், கொலை செய்யப்பட்ட பெண், போலீஸ்காரர்கள் வசிக்கும் காம்பவுண்டில் வேலை செய்து பிழைத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

புதிய விமான நிலையங்களையும், விமானமிறங்கும் பாதைகளையும் நிர்மாணிப்பதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 15.58 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

மதுரை
திலகர் திடலில்
19—1—55 மாலை **6** மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
தென்னரசு
எஸ். முத்து

★

கோமல் பாலக்கரை
19—1—55 மாலை **5** மணிக்கு
தலைவர்: சு. கோ. ராசன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். சி. பன்னீர்செல்வம்
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

சத்திரப்பட்டி
தி. மு. கழக துவக்க விழா
20—1—55 மாலை **6** மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து
வசனப்பித்தன்

★

திருப்பரங்குன்றம்
21—1—55 மாலை **6** மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து
வசனப்பித்தன்

★

கணபதிபாளையம்
21—1—55 வெள்ளி மாலை
பேசுபவர்:
சிற்றுளி சுப்பிரமணியம்

சொற் பயிற்சிக் கூட்டம்

19—1—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி.மு.கழக இல்லத்தில், தோழர் முகில்வண்ணன் தலைமையில், 'கவிஞனும் மக்களும்' என்னும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை தமிழாசிரியர் கழகம்

19—1—55 மாலை 5 மணிக்கு, பச்சையப்பன் உயர் பள்ளியில் (சைனா பஜார் ரோடு) மேற்படி கழக உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் இன்றியமையாச் செய்திகள் பல ஆயப்பெறும்.

கள்ளக்குறிச்சி திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம்

20—1—55 மாலை 6 மணிக்கு, கள்ளக்குறிச்சி வள்ளுவர் திடலில், திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் மு. பாண்டியன் தலைமையில் தமிழர் திருநாள் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சுரதா, வீர அரங்கனார், பொன்னு சொக்கலிங்கம் மற்றும் பலர் பேசுவர்.

நன்றி அறிவிப்பு

"பொங்கல் பெருநாளை முன்னிட்டு வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தனித்தனியே ஒவ்வொருவருக்கும் பதில் எழுத இயலாமைக்கு மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்."

—எம். ஜி. ராமச்சந்திரன்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,